திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடம் பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை மக்கள் குறை தீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப்பிடம் நேரில் சென்று திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ். சந்திரன், வழங்கி உடனடியாக சம்பந்தப்பட்ட மனுக்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார் உடன் மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைக் குழு அமைப்பாளர் ஜி.சித்திக் அலி, உள்பட கழக நிர்வாகிகள் சென்றனர்.

திருவண்ணாமலையில் அருங்காட்சியகம் அமைப்பார்!

தமிழ்நாடு முழுவதும் பல தாஜ்மகால்களை உருவாக்கியவர் அமைச்சர் எ.வ.வேலு!

நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் பேச்சு!

திருவண்ணாமலை, ஜன. 20-

திருவண்ணாமலை மண் தமிழ்சமூகத்தின் வரலாற்று அடிப் படையை உறுதி செய்யும் மண். தமிழகம் முழுவதும் பலதாஜ்ம கால்களை உருவாக்கிய அமைச்சர் எ.வ.வேலு திருவண் ணா மலையில் அருங்காட்சியகம் அமைக்காமல் விட மாட்டார் என்று அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்புத்தாண்டு - தமிழர் திருநாள் விழா முன்னிட்டு தமிழ் நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச் சந்தி ரன் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி சிறப்புரை யாற்றிய போது குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்புத்தாண்டு - தமிழர்திருநாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில் தமிழ் தொண்டாற்றிய வர்களுக்கு மறைமலை அடிகளார் விருதும், பொது தொண்டாற்றிய வர்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி விருதும், கலைத் தொண் டாற்றியவர்களுக்கு கலைவாணர் என்.எஸ்.கே. விருதும், ஆன்மீக தொண்டாற்றியவர்களுக்கு கிருபா னந்தவாரியார் விருதும், சமூகநீதி தொண்டாற்றிவருபவர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் விருதும் வழங்கப்படுகிறது. மேலும் திரு வண்ணாமலை மாநகராட்சி 39 வார்டுகளிலும் வெற்றி பெற்ற மக ளிருக்கு பரிசுகள் வழங்கப்படுகிறது.

18.01.2026 ஞாயிற்றுக்கி ழமை அன்று திருவண்ணா மலை, திருக்கோவிலூர் சாலை, நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதி ரில் அமைக்கப்பட்டுள்ள அருணகி ரிநாதர் அரங்கத்தில் அருணை தமிழ்ச்சங்கம் சார்பில் தமிழ்புத் தாண்டு - தமிழர்திருநாள் விழா நடைபெற்றது.

விழாவிற்கு திருக்குறள் பேர வைத் தலைவர் ப.கண்ணன், அருணகிரிநாதர் விழா குழு தலை வர் வி.தனுசு, மாவட்ட தமிழ்ச் சங் கத் தலைவர் ப.இந்திரராஜன், அரு ணகிரிநாதர் மணி மண்டப அறக்கட்டளைத் தலைவர் மா.சின் ராஜ், கம்பன் தமிழ்ச் சங்க தலை வர் புலவர் ஆ.ஆறுமுகம், அறு பத்து மூவர் ஆய்வு மையத் தலைவர் இரா. வெங்கடேசன், திருக்குறள் சமுதாயம் தலைவர் தமிழ்செல்வி கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காலை 9.00 மணிக்கு திருக்கு வளை சகோதரிகள் முனைவர் மு.சுந்தரி, மு.சாவித்ரி ஆகியோ ரின் நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை செய் யாறு சட்டமன்ற உறுப்பினர் ஓ. ஜோதி தொடங்கி வைத்தார்.

காலை 9.30 மணிக்கு அருணை மருத்துவக் கல்லூரி குழுவினரின் பரதநாட்டியம் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் தொடங்கி வைத்தார்.

காலை 10.00 மணிக்கு 'மங்க லம் பொங்கட்டும்' என்ற தலைப் பில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கத்துக்கு கவிஞர் நெல்லை ஜெயந்தா தலைமை வகித்தார். 'கலப்பை' என்ற தலைப் பில் கவிஞர் நந்தலாலாவும், 'மஞ் சள்' என்கிற தலைப்பில் கவிஞர் பால சண்முகதேவி அவர்களும், 'அரிசி' என்ற தலைப்பில் கவிஞர் இந்திரா விஜயலட்சுமி அவர்க ளும், 'கரும்பு' என்ற தலைப்பில் கவிஞர் தஞ்சை இனியன் அவர்க ளும் கவிதை பாடினார்கள். கவிய ரங்கத்தை சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தொடங்கி வைக்கிறார்.

காலை 11.30 மணிக்கு 'குடும்ப வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது ஆண்களின் உழைப்பா?, பெண் களின் பொறுப்பா?' என்ற தலைப் பில் பட்டிமன்ற நடைபெற்றது. பட் டிமன்றத்திற்கு விஜய் டி.வி. 'கலக்கப்போவது யாரு' புகழ், பேரா சிரியர் கோ.பழனி அவர்கள் நடுவ ராக பொறுப்பேற்றார். 'ஆண்க ளின் உழைப்பே!' என்ற தலைப்பில் குறும்பட இயக்குநர் பாண்டிச்சேரி மதன் அவர்களும், கலைஞர் டி.வி. தணிகைவேலன் அவர்களும், 'பெண்களின் பொறுப்பே!' என்ற தலைப்பில் விஜய் டி.வி. திரைப்பட நடிகை அறந்தாங்கி நிஷா அவர்களும், விஜய் டி.வி. பாரதிகண்ணம்மா யோக தர்ஷினி அவர்களும் வாதிட் டனர். பட்டிமன்றத்தை ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தரணிவேந்தன் தொடங்கி வைத்தார்.

அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வீரத்தமிழன் குழுவினரின் போர்ப் பறை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியை கலசப்பாகம் சட்ட மன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவ ணன் தொடங்கி வைத்தார்.

மாலை 4.00 மணிக்கு முனை வர் த.குமார் வழங்கும் ஸ்ரீ பட வேட்டம்மன், ஸ்ரீ மாரியம்மன் குழுவின ரின் தெருக்கூத்து நடை பெற்றது. நிகழ்ச்சியை செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி தொடங்கிவைத்தார்.

மாலை 5.00 மணிக்கு மாலதி மெலோடிஸ் வழங்கும் இசைத் தமிழ் தேனரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கலைமாமணி மாலதி, கலைமாமணி சின்னப் பொன்னு, கலைமாமணி அனந்து, பாடகர் முகேஷ், பாடகர் கீர்த்திகா மற்றும் சொற்கோ இரா.கருணாநிதி ஆகி யோர் கலந்து கொண்டனர். நிகழ்ச் சியை திருவண்ணாமலை நாடா ளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரைதொடங்கிவைத்தார்.

மாலை 7.00 மணிக்கு சாத னையாளர்களுக்கு விருதுகள் வழங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவில் தமிழ் தொண்டாற் றியவர்களுக்கான 'மறைமலை அடிகளார் விருது' எழுத்தாளர் பவா செல்லதுரை அவர்களுக்கும், பொது தொண்டாற்றியவர்களுக் கான 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி விருது' ஜெ.அம்பிகா அவர்களுக் கும், கலைத் தொண்டாற்றியவர்க ளுக்கான 'கலைவாணர் என். எஸ்.கே. விருது' தாங்கல் ம.சேகர் அவர்களுக்கும், ஆன்மீக தொண் டாற்றியவர்களுக்கான 'கிருபானந் தவாரியார் விருது' வே.சாமுவேல் கென்னடி அவர்களுக்கும், சமூக நீதி தொண்டாற்றிவருபவர்களுக் கான 'முத்தமிழறிஞர் கலைஞர் விருது' கிருஷ்ண கஜேந்திரன் அவர்களுக்கும் மற்றும் பொற்கிழி களையும் தமிழ்நாடு அரசின் நிதி துறை கூடுதல் தலைமைச் செயலா ளர் த.உதயசந்திரன் வழங்கினார்.

அருணைத் தமிழ்ச்சங்கத் தலைவரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு தலைமையுரை நிகழ்த்தினார்..

விழாவில் கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகள் மற்றும் பொற்கிழி வழங்கியும், கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மகளிர்களுக்கு பரிசுகள் வழங்கி யும், தமிழ்நாடு அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் த.உதயச்சந்திரன் பேசியபோது...

அருணை தமிழ் சங்கத்தை மும்மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒன் றிணைந்து நிர்வகித்து வருவதாக அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டிருப்பது பெருமைக்குரி யது. இது தமிழ் சமூகத்தின் உயர்ந்த பண்பாட்டை வெளிப்ப டுத்துகிறது. இங்கு மொழிதான் முதன்மை; மதமும் மற்ற அடை யாளங்களும் அதற்குப் பிறகே. விருதுகள் பெருமை அடைவது அவற்றைப் பெறும் விருதாளர் களை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது.

கிருபானந்தவாரியார் பெயரில் ஆன்மீகத் தொண்டு விருது கென் னடி என்பவருக்கு வழங்கப்பட்ட போது கைதட்டல் நிகழ்ந்தது தமிழ் நாட்டில் மட்டுமே காணக்கூடிய தனித்துவமான பண்பாடு. திரு வண்ணாமலை மண் சமணம், சைவம் ஆகியவை தழைத்த வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இன்றும் தொல்லியல் ரீதியாக முன் கற் காலத்தைச் சேர்ந்த பல தடயங் கள் இம்மண்ணில் கிடைத்து வரு கின்றன. கீழடியில் கண்டெடுக்கப் பட்ட பொருட்கள் சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன்பு செழித்த நாகரிகத்தை வெளிப்படுத்துகின் றன. ஆனால் திருவண்ணாமலை யில் அகழாய்வு மேற்கொண்டால், அதற்கு முன்பே இங்கு நாகரிகம் இருந்தது என்பதற்கான ஆதாரங் கள் கிடைக்கின்றன.

தமிழ்ச் சமுகத்தின் தனிச் சிறப்பு!

தமிழகத்தின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் கீழடி, பொருநை அருங்காட்சியகம் சிறப் பாக அமைக்கப்பட்டதற்கு பொதுப் பணித்துறை அமைச்சரின் பங்கு முக்கியமானது. தமிழர் பெருமை குறித்து சாமானியர் முதல் உயர்ப தவி வகிப்போர் வரை ஒரே நேர் கோட்டில் சிந்தித்து செயல்படுவது தமிழ்சமூகத்தின் தனிச்சிறப்பு.

5300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் இரும்புத் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து பயன்படுத்தியதை அறிவியல் பூர் வமாக நிரூபித்துள்ளோம். இந்திய துணைக்கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பிலி ருந்து எழுதப்பட வேண்டும் என தமிழக முதல்வர் பெருமையுடன் கூறியுள் ளார். முதுமக்கள் தாழியில் கிடைத்த இரும்பு மற்றும் நெல்ம ணிகள் புளோரிடா வரை அனுப்பி ஆய்வு செய்யப்பட்டதன் மூலம் தமிழர் இரும்புத் தொழில்நுட் பத்தை பயன்படுத்தியதை உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத் தில் பல அரசு அலுவலர்கள் ஆர் வத்துடன் தொல்லியல் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். வார இறுதி நாட்களில் தொல்லியல் அடையா ளங்களை தேடும் பணியில் ஈடுப டுகின்றனர். வருவாய்துறையின் பரிந்துரையின் பேரிலேயே கீழடி தொல்லியல் அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது. திருவண்ணா மலை மண் தமிழ் சமூகத்தின் வர லாற்று அடிப்படையை உறுதி செய் யும் மண் என்பதைக் காத்துக் கொள்ள வேண்டும்.

சைவமும் வைணவமும் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிய தால்தான் தமிழின் ஓசை காலம் கடந்து பாதுகாக்கப்படுகிறது. ஐரோப்பாவிற்கு வெளியே முதன் முதலாக அச்சுஇயந்திரத்தில் ஏறிய மொழி தமிழ் மொழியே . 1544ம் ஆண்டில் ரோமன் எழுத்துகளில் தமிழ் நூல் அச்சடிக்கப்பட்டது. இதற் காக தூத்துக்குடியைச் சேர்ந்த மூன்று சாமானிய தமிழர்கள் உழைத்தனர். தாஜ்மகால் எழும்பு வதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழி அச்சில் வந்தது.

தமிழர் பெருமையை அடுத்த தலைமுறைகள் அறிந்து கொள் ளும் வகையில் தமிழகத்தின் பல பகுதிகளில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட உள்ளது. கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சை, ராம நாதபுரம், ஈரோடு, மாமல்லபுரம் ஆகிய இடங்களில் அருங்காட்சிய கங்கள் அமைக்கப்படுவதுடன், இறுதியாக திருவண்ணாமலை யிலும் மிகச் சிறந்த தமிழர் அருங் காட்சியம் அமையும். தமிழக முழு வதும் பல தாஜ்மஹால்களை உரு வாக்கிய பொதுப்பணித்துறை அமைச்சர் திருவண்ணா மலை யில் அருங்காட்சியம் அமைக்கா மல் விடமாட்டார். லட்சக்கணக் கான மக்கள் வந்து காணக்கூடிய வகையில் தமிழர் பெருமையை எடுத்துரைக்கும் அருங்காட்சியம் இங்கு நிச்சயம் உருவாகும்.

இவ்வாறு த.உதயச்சந்தி ரன் பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்த லைவர் க.தர்ப்பகராஜ், முன்னாள் மாவட்ட ஆட்சியர் பாஸ்கரபாண்டி யன், மாவட்ட காவல் கண்காணிப் பாளர் சுதாகர், மாநில தடகள சங்க சீனியர் துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட வரு வாய் அலுவலர் ராம்பிரதீபன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.உத யசூரியன், வசந்தம் கார்த்திகே யன், ப.கார்த்தி கேயன் மற்றும் தமிழ்ஆர்வலர்கள், மருத்துவர் கள், வழக்கறிஞர்கள், மாணவர் கள் என ஆயிர கணக்கானோர் திரண்டி ருந்தனர்.

விழா ஏற்பாடுகளை அருணை தமிழ்சங்க செயலாளர் வே.ஆல் பர்ட், பொருளாளர் எம்.இ. ஜமாலு தீன், இணைச் செயலாளர் எ.வ. குமரன் அவர்களும் சிறப்பாகசெய்து இருந்தனர்.

"முடிச்சூர் ஊராட்சியில் புனிததோமையர் மலை வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சுனில்மேத்பு ஏற்பாட்டில் சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சியில் பம்மல் வடக்கு பகுதி செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் பொங்கல் பரிசுகளையும் தூய்மை பணியாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் முடிச்சூர் மேற்கு கிளை பிரதிநிதி கே.வி.ஜெமீன், சங்கர் சந்திரன், தனசேகரன், ரஞ்சித் சிங், அமிர்தலிங்கம், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கவுல்பஜார் பாஸ்கர், ஸ்ரீதர் மற்றும் சாலமோன்,ஜெபக்குமார், அரசு, ரஞ்சித், ரமேஷ்,சதிஷ், சீனிவாசன், ராஜ், பைலட், மனோஜ், ஆனந்த், கலைசெழியன், கர்ணன், விக்னேஷ், நூர் முகமது சதீஷ்குமார் மற்றும் இளைஞர் அணி சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ரெட்ஹில்ஸ் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் திராவிட பொங்கல் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இரா.கிருஷ்ணமூர்த்தி, பொன். கோதண்டன், ஜெகன், ரூபேஷ், தமிழரசன், கார்த்திக், ஜிவா, நித்தியானந்தம், ஹரிஷ், விக்கி, ஹரி, சூர்யா, கவின், லோகேஷ், பாலாஜி, வேலு, கரிமுல்லா, ஜெகன், முகேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதல்வரின் 'ஆப்ஸ்பின்' 2026 இல் வெல்லும்!

இந்திய கிரிக்கெட் அணி ஆண்டாண்டு காலமாக வெற்றி பெறு வது ஸ்பின் பௌலிங்கால்தான். அஸ்வின், வருண் சக்கரவர்த்தி, வெங்கட்ராகவன், அனில்கும்ளே, பிரசன்னா என்று எழுதிக் கொண்டே போகலாம். ஆப்ஸ்பின் போடுவதில் தமது இளமை காலத் தில் வல்லவராக நம் முதல்வரும் இருந்துள்ளார். அதனால் வரவிருக் கும் 2026 தேர்தலில் அவரது அரசியல் ஆப்ஸ்பின்னால் அ.தி.மு.க. பா.ஜ.க. விக் கெட்டுகளை எடுத்து மிகப் பெரிய வெற்றிப் பெறப் போகி றார். மேன் ஆப் தி மேட்ச், மேன் ஆப் தி சீரிஸ், மேன் ஆப் தி எலெக் சன் என அனைத்துப் பதக்கங்களையும் அவரே பெறப் போகிறார்.

தமிழ்நாட்டின் கடன் பற்றிப் பா.ஜ.க.வினர் பேசுகின்றனர். அது சரி 2014 பிரதமர் மோடி பிரதமராக அமரும் வரை இந்தியாவின் கடன் வெறும் ரூ.53 லட்சம் கோடிதான். இன்று கடன் எவ்வளவு வாங்கி இருக்கிறீர்கள்! கிட்டத்தட்ட ரூ.190லிருந்து 200 லட்சம் கோடி. உங்களுக்கு கடனைப் பற்றி பேச என்ன யோக்கியதை இருக்கிறது.

பார்த்தசாரதி கோயிலுக்கு முதல்வரால் போக முடியுமா? என்கிறீர் கள். பார்த்தசாரதி கோயிலுக்குப் போவது என்ன முடியாத காரியமா? இப்படி பேசும் எச்.ராஜா, அண்ணாமலை, தமிழிசை, நயினார், முரு கன், மோடி, அமித்ஷா என்று அவர்களில் யாராவது ஒருத்தர் முதுகில் அம்பு குத்தி முகத்தில் பெரிய வேல் குத்தி வாகனத்தில் தொங்கிக் கொண்டு வந்து நல்ல கொழுந்துவிட்டு எரியும் தீயை மிதிப்பார்களா. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் தி.மு.க.வின் கொள்கை மறவாதீர்கள்.

மகாத்மா காந்தியின் மீது என்றும் வெறுப்புக் கொண்டவர்கள் தான் பா.ஜ.க மற்றும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள். அதனால் தான் கோட்சே என்ற கொடிய ஆர்.எஸ்.எஸ்காரன் காந்தியாரைச் சுட்டுக் கொன்றான். மேலும் சுட்டதை நியாயப்படுத்தினான். அந்த கோட்சே விற்கு சிலை வைக்க வேண்டும் என்கின்றனர் பா.ஜ.க.வினர். பலர் அந்த கோட்சேவின் பெயரை தம் கைகளில் பச்சைக் குத்தி கொண் டுள்ளனர்.

இந்த நாசக்காரக் கும்பலின் காந்தியாருக்கு எதிரான வெறுப்பு ணர்வு இன்று வரை ஓய்ந்த பாடில்லை. அதன் வெளிப்பாடுதான் மன்மோகன் சிங் ஆட்சியில் 2005ல் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் பெயரை பா.ஜ.க மைனாரிட்டி அரசினர் மாற்றியுள்ளனர்.

வி.பி.ஜி.ராம்ஜி என்று இந்தியில் பெயர் வைத் துள்ளனர். அதுமட் டுமல்ல எந்த ஒரு திட்டத்திற்கும் அவர்கள் இந்தியிலேயே பெயர் வைக்கின்றனர். ஏற்கனவே காலங்காலமாக இருந்து வந்த IPC, CRPC, IEA அதாவது இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் சட்டம், இந்திய எவிடன்ஸ் சட்டம் என்ற பெயர்களை சொல்லவே முடியாத இந்தியில் பெயரை மாற்றினர்.

இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகளில் இந்தியும் ஒன்று அவ்வளவுதான். பிறகு எதற்கு அந்த மொழியில் மட்டும் பெயர் மாற் றங்களை செய்கின்றனர். இதன் மூலம் இந்தியையும் சமஸ்கிருதத் தையும் மற்ற மாநிலங்களில் திணிக்க முயல் கின்றனர் என்பதை தவிர வேறென்ன காரணம் இருக்க முடியும். அந்தச் சட்டங்களின் பெயரை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கறிஞர் சொல்லச் சிரமப்பட்ட போது உயர்நீதிமன்ற நீதிபதி அதை விடுங்க பழைய படியே சட்டங்களை குறிப்பிட்டுப் பேசுங்கள் என்று கூறியுள்ளார்.

காந்தி பெயரிலான வேலை திட்டத்தை 100 நாட்களிலிருந்து 125 நாட்களாக உயர்த்தியுள்ளனர். அன்றைய பிரதமர் மன்மோகன் சிங் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது நிதி ஒரு பிரச்சினையாக இருக்காது என்றார். ஆனால் தற்போதைய அரசோ நிதியில் 60% ஒன்றிய அரசும் 40% மாநில அரசும் தரவேண்டும் என்று அறிவுறுத் தியுள்ளது. ஏற்கனவே நிதியை பல்லாயிரம் கோடி குறைத்தது இன் றைய ஒன்றிய அரசு. 40 நாட்கள் வேலை வழங்குவதற்கே அந்த நிதி போதாது என்ற நிலை இருந்தது. நிதியும் நிலுவையில் உள்ளது.

இந்தத் திட்டத்தில் பயனடைபவர்கள் பெரும்பாலும் கிராமப்புற பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள், முதியோர்கள், தொழிலாளர் கள்தான். இதை கணக்கில் கொள்ளாத பா.ஜ.க. அரசு இதற்காக நிதியை அதிகரித்து அவ்வரசே தர வேண்டும். மாநில அரசுக்கு மடை மாற்றம் செய்யக்கூடாது. இதற்கு அப்படியே ஒப்புதல் வழங்கிவிட்டார் ஜனாதிபதி திரௌபதி முர்மு.

ஏற்கனவே பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தில் 61% நிதி மாநில அரசு தான் தருகிறது ஒன்றிய அரசு 39% தான் தருகிறது. பெயர் மட் டும் பிரதமர் பெயர். பிரதான் மந்திரி மத்திய சம்பந்த யோஜனா திட்டம் ஒன்றிய அரசு அறிவித்தது. அதற்கான நிதி மாநில அரசு 73% ஒன் றிய அரசு தருவது 27% தான். பெயர் என்னவோ பிரதமர் பெயர். ஜல் ஜீவன் மிஷன் திட்டம் மாநில அரசு தரும் நிதி 55% மீதம் ஒன்றிய அரசு. முதியோர் உதவித் தொகைக்கு ஒன்றிய அரசு தருவது வெறும் 200 ரூபாய் தான். மீதம் ஆயிரத்துக்கும் மேல் மாநில அரசு தான் தருகிறது. பெயர் மட்டும் பிரதமர் பெயர் இருக்க வேண்டும். இது என்ன நியாயம்? கேட்டால் ஸ்டிக்கர் ஒட்டுகிறது தமிழக அரசு என்று பா.ஜ.கவினர் கூறுகின்றனர்.

வி.பி.கலைராஜன்
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இயற்கைப் பேரிடர் நிதி பாதிக்கப் பட்ட மக்களுக்கு தர வேண்டிய நிதி மாநில அரசு கேட்டது ரூ.24,679 கோடி. ஆனால் ஒன்றிய அரசு தந்தது வெறும் 4136 கோடி மட்டுமே. அதாவது 17% தான். இதே பா.ஜ.க. ஆளும் பல மாநிலங்களுக்கு 30 லிருந்து 35% வரை வழங்கியுள்ளது. அப்படியானால் தமிழர்கள் இந் தியர்கள் இல்லையா?

பிரதமர் மோடி மற்றும் அமைச்சர் அமித்ஷா தமிழ்நாடு வரும் போதெல்லாம் தமிழ் பண்பாடும், கலாச்சாரமும் பழமையானது என் பது இந்தியாவிற்குப் பெருமை. தமிழ் மொழி உலகில் மூத்த மொழி அந்த மொழியை கற்றுக் கொள்ளவில்லையே என்று வருத்தப்படுகி றோம் என்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிற்கு சமக்ர சிக்ஷான் அபி மான் திட்டம் மூலம் தரவேண்டிய ரூ.3000 கோடிக்கு மேல் நிதி தர மறுக்கிறார்கள். கேட்டால் இந்தி மொழியை மூன்றாம் மொழியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். நீங்கள் 10,000 கோடி தந்தா லும் இந்தியை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தமிழ்நாட்டு முதல் வர் தளபதி அவர்கள் கூறி விட்டார்கள்.

சமஸ்கிருதம் மொழி பேசுபவர்கள் வெறும் 24,000 பேர்தான். ஆனால் தமிழ் மொழி பேசுபவர்கள் தமிழ்நாட்டில் 8 கோடி பேர் உல களவில் 10.50 கோடி பேர். ஆனால் தமிழ் மீது பாசம் இருப்பதைப் போல் காட்டிக் கொள்ளும் ஒன்றிய அரசு தமிழை விட 17% சமஸ்கி ருத வளர்ச்சிக்கு கூடுதலாக நிதி தருகிறது. இதற்கு பெயர் என்ன வார ணாசி அல்வாவா? அல்லது குஜராத் அல்வாவா?

வாக்காளர் வரைவு திருத்தம் அவசர கதியில் நடத்த வேண்டாம் என்றுதான் முதல்வர் கூறினார். இன்றைக்கு 97 லட்சம் பேர் பட்டிய லில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதில் என்ன சதி நடந்துள்ளது என்பதை விசாரித்தால்தான் உண்மை வெளிவ ரும். உடனே தமிழிசை இதெல்லாம் கள்ள ஓட்டாம்! இதை வைத்துத் தான் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது என்று அள்ளி விட்டுள்ளார்.

துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் இந்தி கற்று வருகிறாராம். கனிமொழி கருணாநிதி எம்.பி. எத்தனை ஆண்டுகளாக டெல்லி அரசியலில் உள்ளார். அவ ருக்கு இப்போது தான் இந்தி கற்க வேண்டும் என ஆசை வந்ததா? அவதூறின் மறுவடிவம் தமிழிசையே! எந்த ஆசிரியரிடம் அவர் இந்தி கற்று வருகிறார் என்பதை உங்களால் கூற முடியுமா? இந்தி கற்று வருகிறேன் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. தங்க ளிடம் கூறினாரா?

13 அமைச்சர்கள் மீது ஊழல் வழக்கு உள்ளதாம். இனிமேல் தமிழ்நாடு அமைச்சரவைக் கூட்டம் சிறையில்தான் நடக்கப் போகிற தாம். தமிழிசை கூறியுள்ளார். ஆதாரத்துடன் ஊழல் வழக்கை கூறு வாரா? எந்த 13 அமைச்சர்கள் என்று கூறுவாரா?

மேலும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை திருவள்ளுவர் கோட்டை யாக அறிவிக்க வேண்டுமாம். அம்மையாரே செயின்ட் ஜார்ஜ் கோட் டையில் புல் வெட்ட டெல்லியில் அனுமதி கேட்க வேண்டுமா என்று கேட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இது உங்களுக்கு தெரியாது.

அதற்காகத் தான் சேப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகத்தை எழில் வளத்துடன் கட்டினார் தலைவர் கலைஞர். அந்த கட்டிடத்தில் அமர்ந்து பேசுகிற வாய்ப்பைப் பெற்றவன் நான். ஆனால் கலைஞர் கட்டினார் என்பதற்காக அந்த தலைமை செயலகத்தை மருத்துவம னையாக மாற்றியவர் ஜெயலலிதா அம்மையார்.

எனவே தமிழிசையே திருவள்ளுவர் மீது உங்களுக்கு அவ்வ ளவு பாசமா? ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில்தான் செயின்ட் ஜார்ஜ் கோட்டை உள்ளது. உடனே பிரதமர் மோடியிடம் கூறி திருவள்ளுவர் பெயரை வைக்கச் சொல்லுங்கள். அதற்கு முன் ஒரு கேள்வி. உங் கள் கட்சியைச் சேர்ந்த எம்.பி. தருண் விஜய் என்பவர் திருவள்ளுவர் சிலையை தமிழ்நாட்டிலிருந்து கொண்டு சென்றார். அதை எங்கே வைத்துள்ளார் என்று கூற முடியுமா? தூக்கி வீசிவிட்டாரா? அப்படி யென்றால் எங்கே வீசியுள்ளார் கண்டுபிடித்து கூறுங்கள்.

தமிழிசையே! உங்களால் முடிந்தால் பிரதமர் மோடியிடம் பேசி திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வழி வகுப்பீர்களா? இங்கே வாய் அளப்பதைப் போல் மோடியிடம் வாய்அளந்து வெற்றி காணுங் கள்.

கூட்டாட்சி தத்துவத்தின் அடிப்படையில் செயல்படக் கூடிய நாடு இந்தியாவாம் உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர் கூறியுள்ளார். கூட்டாட்சி தத்துவம் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்த போது என்ன ஆனது? வேளாண் பாதுகாப்பு சட்டம் கொண்டு வந்த போது 726 விவசாயிகள் ஓராண்டுக்கு மேல் போராடி வீதியில் செத்து விழுந்தார்களே அப் போது எங்கே போனது?

மணிப்பூரில் பழங்குடியின குக்கி மக்கள் லட்சக்கணக்கானோர் வேறு மாநிலத்திற்கு சென்றனர். பல நூறு பேர் கொல்லப்பட்டனர். அந்த மணிப்பூருக்கு சென்று பார்க்க 863 நாட்கள் பிரதமர் மோடிக்கு தேவைப்பட்டது. கிறிஸ்தவ கோயில்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட் டன. இப்போது சத்தீஸ்கரில் கிறிஸ்துவ தேவாலயங்கள் இடிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்தவர்கள் படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதுதான் கூட்டாட்சி தத்துவமா?

பட்டியலினத்தைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் மீது செருப்பு வீசப்பட்டது. வீசியவர் ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர் நீதிமன்றத்திற்குள்ளேயே தலைமை நீதிபதிக்கு பாதுகாப்பு இல்லை. பிரதமர் மோடி முன்னாள் தலைமை நீதிபதி சந்திரசூட் வீட்டிற்கு சென் றாரே, செருப்பு வீச்சு தாக்குதலுக்கு ஆளான தலைமை நீதிபதி கவாய் வீட்டிற்கு ஏன் செல்லவில்லை? பட்டியலினத்தவர் வீட்டிற்கு சென்றால் மோடி அரசு தீட்டாகி விடுமா? இதுதான் கூட்டாட்சி தத்துவத்தின் மாண்பா?

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தமிழ்நாட்டிற்கு வந்த போது ஸ்ர